# உயிர் இரக்கம் - 2

## கொலை தவிர்ப் பதிகம்

(மு. முத்துஜோதி)

(இஃது 26-03-1995 அன்று சென்னையின்று பெண்ணாகடம் திரும்புகையில் சாலையோரத்தில் உயர்க்கொலை ஒன்றை கண்ணுற்று, உந்து வண்டிப் பயணத்தில் உளம் பதைக்க எழுதியது)

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**

இது…

உடல்நலம் கருதி மருத்துவர் ஆலோசனையில் புலாலை விட்டுவிட மனமில்லாமல் ஏங்குவோர்க்கும் மற்ற அனைவருக்கும் சமர்ப்பணம்.

(1)

பிள்ளைக் குட்டி பெற்றெடுக்கும் பெரிய மனிதரே!
 பெண்டுபிள்ளை சூழவாழும் அரிய மனிதரே!
கள்ளைஉள்ளுக் கொண்டவர்போல் கருத்து இன்றியே,
 கடினமன சித்தத்தோடு என்னச் செய்கிறீர்?
கிள்ளைஆடு பன்றிமாடு கோழி மீன்களை
 கருணையின்றி காலமெல்லாம் உயிரை மாய்த்துமே
கொள்ளை கொள்ளும் கோரமதை மகிழ்ந்து செய்கிறீர்
 கோயில்பின்னே போவதாலே என்ன புண்ணியம்?

(2)

அம்மா அம்மா என்று உயிர்கள் அலறினாலுமே
 ஆடும் காலை கழுத்தை நீங்கள் அழுத்திப்பிடித்துமே
“சும்மா வெட்டு” என்றுச்சொல்லி சுளித்தலின்றியே
 சாவும் உயிரின் இரத்தத்தையும் உண்டு மகிழுவீர்!
திம்மானென உண்டு நீங்கள் உடலை வளர்க்கவே
 தேடித்தேடி தினமும் உயிரை கொன்று தின்றபின்
பெம்மானென, தேவானென, ஈசன் என்றுமே
பிதற்றினாலும் கொன்றபாவம் எங்கே போகுமோ?

(3)

பெற்றபிள்ளை உற்றதங்கை மனைவி யாவரும்
 பேதமின்றி சிரித்துப்பேசி நீங்கள் வாழுவீர்!
சுற்றத்தோடு கூடிநீங்கள் குலவும் பேதெல்லாம்
 சுவைக்கும் உணவு நீங்கள் உண்ண, உங்கள் அடுப்பிலே!
மற்றஉயிர்கள் ஏனோ தங்கள் பெண்டுபிள்ளையை
 மாளாத்துயரில் ஆழ்த்திவிட்டு மடிந்து வேகணும்?
கற்ற நல்ல மனிதர்களே கடுகள வேணும்
 கருணையோடு இக்கருத்தைக் கருதி பார்க்கணும்.

(4)

சுண்டுவிரலின் நுனியின்மேலே கடுகு போன்றதோர்
 சிறியகாயம் கண்களுக்குத் தெரியா அளவிலே
குண்டுஊசி குத்தியதால் வந்து விட்டாலோ
 குதித்து நீங்கள் ஆர்ப்பரித்து கூட்டம் கூட்டுவீர்!
துண்டுபோட்டு ஆட்டுத்தலையை துவள வெட்டுவீர்
 துடிக்கத்துடிக்க நெருப்பில் பன்றிச்சுட்டு வாட்டுவீர்!
நண்டுக் காலை நடக்கெனவே நீட்டிஒடித்துதான்
 நாக்குத் தட்டிக் குடித்திடவே சூப்பு செய்குவீர்!

(5)

மனிதரோடு மனிதர்சேர்ந்து மாடு பிறக்குமா?
 மனிதரோடு மனிதர் சேர்ந்து கோழி பிறக்குமா?
மனிதன் உண்ண மற்ற உயிரை பிறக்க வைக்கவே
 மனிதன் என்ன செய்யமுடியும் நினைத்துப் பாருங்கள்!
மனிதருக்கு உண்ணநாளும் மாடு வேண்டுமேல்
 மாட்டினத்தைக் கொண்டுதானே மாடு கிடைக்குமே!
மனிதா உந்தன் மகத்துவமே இந்த அளவுதான்
 மாய்க்க உனக்கு மற்றஉயிரை உரிமை ஏதடா?

(6)

நெல்லுப்பயிர் தாவரமும் இந்த அளவில்தான்

நாமும் உண்ண உணவாக வருகுதென்குராய்!

நெல்லுமணி விரையதனை வேண்டும் போதெல்லாம்

நீரில் மண்ணில் சேர்த்து நீயும் விளைவு செய்யலாம்!

கொல்லும்போது மாடுகோழி குதித்து துடிக்குமே!

கூறுசெய்யும் போது செடி குதித்து வருந்துமா!

எல்லாமே ஓர்விதத்தில் உயிர்கள் என்றாலும்

ஓரறிவு செடிகொடிக்கு உணர்வு கொஞ்சமாம்!

(7)

குஞ்சு ஒன்றை வளர்க்கக் கோழி படும்பாட்டையே,

குட்டிக்கன்றை வளர்க்கப்பசு படும் பாட்டையே,

கொஞ்சநேரம் நீங்கள் குந்தி நினைத்துப் பாருங்கள்!

கோடு போல போகும் எறும்பு அருகே தட்டினால்

அஞ்சிநாலா புறமும் ஓடி அலைந்து தவிப்பதேன்?

அருமை உயிரை காத்துக் கொள்ள எடுக்கும் முயற்சியே!

தஞ்சமென்று உங்கள் காலில் வந்த உயிர்களை

தவிதவிக்க வெட்டுவது தங்கள் தர்மமா?

(8)

வாழும் உயிர் துன்பப்பட்டால் கடவுள் காக்குமாம்!

வேதனைகள் வந்துவிட்டால் கடவுள் மாற்றுமாம்!

ஆழுலகில் உயிர்தருதல் ஈசன் என்பதால்

உயிர்க்காக்க மரம்வைத்தார் நீரை ஊற்றுவார்!

ஏழும் பிறவி அவை அனைத்தும் அவன் படைப்பென்றால்

ஏது உரிமை இங்குமக்கு அவற்றை மாய்க்கவே?

பாழும் பலி உயிருடலை பரமன் பேரிலே

பரிதவிக்க செய்து வந்தால் கடவுள் பொறுக்குமா?

(9)

எந்தக்கடவுள் உங்கள் முன்னே தோன்றி உயிர்களை

ஏங்கவெட்டி ரத்தம் சொட்டத் தரச் சொன்னது?

தந்திரத்தால் பூசாரி சாமி ஆடியே

தடித்த ஆடு கோழிகேட்டுத் தலையைத் தின்கிறான்!

மந்த புத்தி சாது உயிர்கள் இவைகளின்றியே

மாய்க்கும் புலி சிங்கமதனை பலி கேட்குமா?

சொந்த புத்தி கொண்டு கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்

சோக உயிர் முனகும் ஓசை காதில் ஒலிக்குமே!

(10)

வெள்ளிச் சனி விரதமெனும் நோன்பு நாளிலும்

புரட்டாசி மாதத்திலும் புலால் தன்னையே

தள்ளி வைக்கும் தருமவானே தெய்வம் தனக்கு

தீயப் புலால் பிடிக்கவில்லை என்று புரியுதா?

பள்ளி செல்லும் பச்சைப்பிள்ளை இதனை அறியுமே,

பெரியவரே நீங்கள் இதனை உணர மறுப்பதேன்?

அள்ளி நம்மை அணைத்துக் கொள்ள ஐயன் விரும்புவார்

ஆடுகோழி போன்றதற்கு அன்பு காட்டினால்!

-முற்றும்-